**கவனிக்க .**- *15.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1838 - 2013 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2013.11.22

*1838 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# *பகுதி* I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | 1034 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1035 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1035 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2013 இன் இல. 354

டிவீஎவ்/ஆர்ஈசீரீ/284/04/ஏவை.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அவர்களின் பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக பிரிகேடியர் பதவிக்கு பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) கர்னல் கோனதுவகே சிரிவர்தன பெரேரா (உ/2286) - 26.06.2013
(ஆ) கர்னல் தர்மகீர்த்தி ஹேரத் முதியன்சேலாகே வனிகரத்ன பண்டா தம்மிட்ட (உ/2552) - 26.06.2013
(இ) கர்னல் விஜேசிங்க விதானலாகே மேர்வின் கெகரி ரியென்சி (உ/2408) - 18.10.2013

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, ஒற்றோபர் 22.

11-665

---

டிவீஎவ்/ஆர்ஈசீரீ/280/32/ஏவை.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதலும் இளைப்பாறுதலும்

**பதவி தாழ்த்துதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்ணல் பதவி வரை பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக கர்ணல் அகுருகொட கலுஆரச்சிலாகே சுரவீர, ஆர்எஸ்பீ (உ/2308)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதியிலருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையணியிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனட் கர்ணல் அகுருகொட கலுஆரச்சிலாகே சுரவீர, ஆர்எஸ்பீ (உ/2308)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2010, மே 12.

11-664

---

2013 இன் இல. 355

டிவீஎவ்/ஆர்ஈசீரீ/280/127/ஏவை.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, ஓகத்து மாதம் 12 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்ணல் பதவிக்கு நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினனட் கர்ணல் தொன் பந்துல துஷான் விஜேவிக்ரம, கவீப (உ/2166)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, ஓகத்து மாதம் 13 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனட் கர்ணல் தொன் பந்துல துஷான் விஜேவிக்ரம, கவீப (உ/2166)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, யூலை 27.

11-821

# அரசாங்க அறிவித்தல்கள்

**பொது முகாமையாளர் அலுவலகம்**

*1965 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க புகையிரத நாட் சம்பள தயாள சிந்தனைச் சங்க சட்டம்*

**30 அ(1) இன்படி நடவடிக்கைக் குழுவினை இரத்துச் செய்தல்**

*2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதிய 1829 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் உங்கள் கவனத்திற்கு ஈர்க்கப்படுகின்றது.*

இதற்கமைய தலைப்பு பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் "1965 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க புகையிரத நாட் சம்பள தயாள சிந்தனை ஊழியர் சங்க சட்டம் 30 அ(1) இன்படி நடவடிக்கைக் குழுவினை இரத்துச் செய்தல்" அத்துடன் விசேட நிர்வாக குழுவில் நியமிக்கப்பட்ட இயந்திரவியல் பொறியியலாளர் திரு. பி. ஏ. கிரிஷாந்தவின் பெயர் திரு. ஜி. ஏ. கிரிசாந்த என திருத்தப்படல் வேண்டும்.

பீ. ஏ. பி. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

11-754

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நெல்லியடி கிளை) - சிங்கராஜா சுபராஜா மற்றும் உமையாள் சுபராஜா

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"சிங்கராஜா சுபராஜா மற்றும் உமையாள் சுபராஜா கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் ஆனைக்கோட்டை பிரசித்த நொத்தாரிசு எம். தியாகராஜாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, பெப்புருவரி 02 ஆந் திகதியிடப்பட்ட 13913 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2013, மார்ச் 06 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது தொண்ணூற்று ஆறு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுபத்து நான்கு ரூபா முப்பத்துமூன்று சதம் (ரூ. 96,78,074.33) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 13913 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 96,78,074.33 பணத்தொகையை 2013, மார்ச் 07 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் அதன் மீதான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் பிரிவில் உள்ள வண்ணார்பண்ணையின் பங்கில் உள்ள வண்ணார்பண்ணை வடகிழக்கில் உள்ள 'காட்டலம்புலம்' என அழைக்கப்படும் 3 லாச்சம் VC மற்றும் 2.7/10 குழி விஸ்தீரணமானதும், ஆனால் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. அருள்நேசனினால் தயாரிக்கப்பட்ட 02.05.2011 ஆந் திகதியிடப்பட்ட 1030 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 இற்கு அமைவான 3 லாச்சம் VC மற்றும் 02.41 குளி விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடனான வீடு, பயிர்ச்செய்கை மற்றும் அத்துடனான, சம்பந்தப்பட்ட எல்லாம். சொல்லப்பட்ட 3 லாச்சம் VC மற்றும் 02.41 குளி விஸ்தீரணத்தைக் கொண்டதன் எல்லைகள் - வடக்கு : திருக்குமரனின் மனைவி ரேணுகா மற்றும் சிறிகந்தாவின் மனைவி நந்தினியின் ஆதனங்கள் ; கிழக்கு : சிதம்பரப்பிள்ளையின் மனைவி சர்வேஸ்வரி மற்றும் சின்னத்துரையின் மனைவி ராஜினி மற்றும் ஏனையவர்களது ஆதனங்கள் ; தெற்கு : ஒழுங்கை; மேற்கு : கந்தசாமியின் மனைவி விஜயராணியின் ஆதனம்; .

சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரைப்பங்கு கிணற்று பங்கு அத்துடன் தூர்வை மற்றும் நீர் ஓடை உள்ளிட்ட இத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

11-721/1

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*(கிருலப்பனை கிளை) - கொசின்ஹல வித்தானகே ருவின் திலந்த போபிற்றிய, கொஸ்சின்ஹல வித்தானகே ரிஷாந்தி சமீத போபிற்றிய மற்றும் ரொஸ்சன்னோ ஜோசப் கிறாண்ட்*

*ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -*

*"கொசின்ஹல வித்தானகே ருவின் திலந்த போபிற்றிய, கொஸ்சின்ஹல வித்தானகே ரிஷாந்தி சமீத போபிற்றிய மற்றும் ரொஸ்சன்னோ ஜோசப் கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டி. ஏ. கே. அத்திக்காரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, திசெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட 1037 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2013, ஓகத்து 29 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது அறுபது இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 60,46,291.71) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 1037 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 60,46,291.71 பணத்தொகையை 2013, ஓகத்து 30 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் அதன் மீதான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள மஹரகம நகர சபை எல்லைக்கு உட்பட்ட தலவத்துகொடவில் உள்ள முதலாம் ஒழுங்கை, 29ஏ வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள டோலிலண்ட் தவற்றகஹாவத்த, தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டி. டி. ஹெற்றிகேயினால் தயாரிக்கப்பட்ட 1993, மார்ச் 12 ஆந் திகதியிடப்பட்ட 2820 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 20 என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : இத்துடனான காணித்துண்டு 19; கிழக்கு : இத்துடனான காணித்துண்டு 51 (15 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) ; தெற்கு : இத்துடனான காணித்துண்டு 21 ; மேற்கு : இத்துடனான காணித்துண்டு 17, அத்துடன் சொல்லப்பட்ட 2820 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், ஹோமாகம காணிப் பதிவகத்தில் ஜி 1771/ 38 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பதினொரு பேர்ச் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.*

*முன் சொல்லப்பட்ட ஆதனம், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைய, பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-*

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்றுவில் உள்ள மஹரகம நகர சபை எல்லைக்கு உட்பட்ட தலவத்துகொடவில் உள்ள கலல்கொட, முதலாம் ஒழுங்கை, 29ஏ வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள டோலிலண்ட் தவற்றகஹாவத்த மற்றும் தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2010, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட 5912/ 9000 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 20ஏ என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. ரி. பீ. சுமதிரட்னவின் காணி ; கிழக்கு : வீதி 15 அடி அகலமானது (உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் . டி. டி. ஹெற்றிகேயினால் தயாரிக்கப்பட்ட 2820 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 51) ; தெற்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளர் டி. டி. ஹெற்றிகேயினால் தயாரிக்கப்பட்ட 2820 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 21 ; மேற்கு : உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டி. டி. ஹெற்றிகேயினால் தயாரிக்கப்பட்ட 2820 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 17, அத்துடன் சொல்லப்பட்ட 5912/ 9000 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான பதினொரு பேர்ச் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.*

*அத்துடன், முன் சொல்லப்பட்ட 1037 ஆம் இலக்க அடகு முறியில் உள்ள இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவாக பாதைகள் உரிமையுடன் சேர்த்து.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கே. ஏ. எல். ரி. ரணவீர,*
*பி.பொ.மு (சட்டம்) / சபைச் செயலாளர்.*

*11-721/ 2*

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*(மாத்தளை கிளை) - சமிந்த ஜானக தும்போவில*

*ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் நடத்தப்பட்ட கூட்டம்*

ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் –

"சமிந்த ஜானக தும்போவில கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, யூன் 23 ஆந் திகதியிடப்பட்ட 2044 ஆம் இலக்க முறி (பகுதி) மற்றும் 2011, நவெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட 2626 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2013, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு கோடியே ஐம்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்தேழு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 1,00,59,387.41) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 2044 மற்றும் 2626 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 1,00,59,387.41 பணத்தொகையை 2013, யூன் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் அதன் மீதான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் டி. கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் உள்ள மாத்தளை வடக்கின் தம்புள்ளை செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட வகபனஹா பள்ளேசிய பட்டுவாவில் உள்ள தம்புள்ள கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட தித்தவல்கொல்ல மறுபெயர் தமுலுஓயா கிராமத்தில் உள்ள விஜயசிரி வத்த என தற்போது தெரியப்படும் வம்பட்டுயாய, பலுக்காககணடயாய கலேயாய மற்றும் கொஸ்வத்தேமுல்லே கும்புர என அழைக்கப்படும் காணி, உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அனுரரட்னவினால் தயாரிக்கப்பட்ட 31.01.2000 ஆந் திகதியிடப்பட்ட 670 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் – வடக்கு : அதே காணியின் மிகுதியான பகுதி ; கிழக்கு : தம்புல்லவில் இருந்து களுந்தாவ செல்லும் வீதி ; தெற்கு : எல ; மேற்கு: தம்புலுஓயா, அத்துடன் மாத்தளை மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் டி 470/10 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இரண்டு றூட் மற்றும் இருபத்தைந்து பேர்ச் (0ஏ. 2றூ. 25பே.) விஸ்தீரணம் கொண்ட ஆதனத்துடனான கட்டடம் மற்றும் அதனுடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

11-721/3

## இ. அ. நி. கூ. வங்கி

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2013, ஒற்றோபர் 9 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மஹாவெல பஷன் பலஸ்" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தொழில் கொண்டு நடாத்துகின்ற தங்கல்லையைச் சேர்ந்த ஜகத் கீர்த்தி பறணமாண மறுபெயர் ஜகத் கீர்த்தி டி சில்வா பறணமான மறுபெயர் பறணமானகே ஜகத் கீர்த்தி டி சில்வா என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சேனக்க ஆர். அபேவிக்ரம என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, யூன் 10 ஆந் திகதிய 747 ஆம் இலக்க, ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

அத்துடன் 2013, யூலை 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக நாற்பது இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று இருபத்துமூன்று ரூபா எண்பது சதம் (40,58,123.80) கொண்ட தொகையும், 2013, ஒகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை முப்பத்தாறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து அறுபத்து நான்கு ரூபா (ரூ. 36,26,064) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாய்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாக விருக்கும் வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) எல்லையும் ; அதாவது

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

சொல்லப்பட்ட ஜகத் கீர்த்தி பறணமாண மறுபெயர் ஜகத் கீர்த்தி டி சில்வா பறணமான மறுபெயர் பறணமானகே ஜகத் கீர்த்தி டி சில்வா என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின்

4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 747 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து நாற்பது இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று இருபத்துமூன்று ரூபா எண்பது சதம் (40,58,123.80) கொண்ட தொகையும், 2013, ஓகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை முப்பத்தாறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து அறுபத்து நான்கு ரூபா (ரூ. 36,26,064) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) எல்லையும் ; அதாவது

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப் படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டு முறிகள் மூலம், ஜகத் கீர்த்தி பறணமான மறுபெயர் ஜகத்கீர்த்தி டி சில்வா பறணமான மறுபெயர் பறணமானகே ஜகத் கீர்த்தி டி சில்வா என்பவரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதார் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**747 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள தெற்கு கிருவ பத்துவில் நக்குலுகமுவவில் அமைந்துள்ளதும், சியபலாகஹாவத்தவின் காணித்துண்டம் B எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஆர். மாபரண என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.05.16 ஆந் திகதி 3524 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பபட்டதும். எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டம் 2 இனதாய் அதன் மீதுள்ள எல்லாப் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் மண்ணின் முழுமையடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது வடக்கு : வலஹேன மற்றும் கோங்கஹாவத்த ; கிழக்கு : தேவட்ட வீதி; தெற்கு : திக்வெல்லையிலிருந்து தங்கல்லைக்குச் செல்லும் பிரதான வீதி மற்றும் 3524 ஆம் இலக்க வரைபடத்தின்படி காணித்துண்டம் 1 மற்றும் ; மேற்கு : அதே காணித்துண்டம் A மற்றும் 3524 ஆம் இலக்க வரைபடத்தின்படி காணித்துண்டம் 1; பரப்பளவில் இது, ஒரு ஏக்கர், ஒரு றூட் முப்பத்தொன்பது பேர்ச் (1ஏ. 1று. 39பே.) கொண்டுள்ளதுடன், தங்கல்லைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

ஏ. ஆர். பர்ணாந்து,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

11-728

---

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது.)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்.

கணக்கு இல.: 0130-32531087-101 (நீர்கொழும்பு கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2013.09.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென அறிவிக்கப்படுகின்றது:-

"கடவத்தையைச் சேர்ந்த பட்டபெந்திகே தொன் சாலக நவின்த விக்கிரமசூரிய "கடனெடுத்தவர்" என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது - கம். பதிவு இல. PQ 9) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஐ. ரி. குணத்திலக என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2011, பெப்புருவரி 10 ஆந் திகதிய 1857 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2013, மே 03 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது ஐம்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்றாராயிரத்து எழுநூற்று ஏழு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 56,96,707.21) செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு உரியதாக செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 56,96,707.21 பணத் தொகையையும் 2013, மே 04 ஆந் திகதிமுதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தொரு சதவீதப்படி (31%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 1857 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு ஈடு வைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட

கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் மற்றும் பதிவுப் பிரிவினுள் சியானே கோறளேயின் அதிகாரி பத்துவில் பியகம பிரதேச சபை எல்லைகளினுள் மாக்கொல உப அலுவலகப் பிரதேசத்தில் மாக்கொல தெற்கில் அமைந்துள்ள "கொடபரகஹவத்த" என்றழைக்கப்படும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. சி. எம். எஸ். விமலரத்னவால் தயரிக்கப்பட்ட 2005.09.15 ஆந் திகதிய 240/2005 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 3 இன் உட்பிரிவும் மீள் அளவீடாயுமுள்ள) காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. சி. எம். எஸ். விமலரத்னவால் தயாரிக்கப்பட்ட 2010.08.13 ஆந் திகதிய 146/2010 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3C எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 3C இன் எல்லைகள் - வடக்கு : துண்டுகள் 3A மற்றும் 3B ; கிழக்கு : துண்டு 3D ; தெற்கு : நெல் வயல் ; மேற்கு : வரைபடம் இல. 1/81 இல் துண்டு 1 (5 மீ. அகல மான வீதி). இது இருபத்தெட்டுதசம் ஐந்து ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 28.56பே.) விஸ்தீரணம் கொண்டது.

மேலே சொல்லப்பட்ட துண்டு 3C கீழே விவரிக்கப்பட்ட காணியிலிருந்து உட்பிரிவிடப்பட்ட ஒரு பங்காகும்:-

மேலே சொல்லப்பட்ட மாக்கொல தெற்கில் அமைந்துள்ள "கொடபரகஹவத்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்ட (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எம். அழகக்கோனின் 1922.09.19 ஆந் திகதிய வரைபடத்தில் காட்டப்பட்ட ஒரு காணிப்பங்கீட்டின் எஞ்சிய பங்கின் இப்போதுள்ள எல்லைகளின் ஒரு மீள் அளவீடும் உட்பிரிவுமாயுள்ள) துண்டு 3 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 3 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 8 ; கிழக்கு : துண்டு 4 ; தெற்கு : நெல் வயல் ; மேற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. சி. கொத்தலாவலையால் தயாரிக்கப்பட்ட 1981.01.23 ஆந் திகதிய வரைபடம் இல. 1/81 இல் துண்டு 1 (5மீ. அகலமான வீதி). ஒரு றூட் பத்து தசம் ஏழு ஆறு பேர்ச் (0ஏ. 1றூ. 10.76பே.) விஸ்தீரணம் கொண்ட இது கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 958/22 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனுடன் கீழே விவரிக்கப்பட்டவாறு வழி உரிமை கொண்டதாக :-

மேலே சொல்லப்பட்ட மாக்கொல தெற்கில் அமைந்துள்ள "கொடபரகஹவத்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்ட (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எம். அழகக்கோனின் 1922.09.19 ஆந் திகதிய வரைபடத்தில் காட்டப்பட்ட ஒரு காணிப்பங்கீட்டின் எஞ்சிய பங்கின் இப்போதுள்ள எல்லைகளின் ஒரு மீள் அளவீடும் உட்பிரிவுமாயுள்ள) துண்டு 8 (வீதிக்கான ஒதுக்கம் எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 8 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 2 ; கிழக்கு : துண்டு 7 ; தெற்கு: நெல் வயல் மற்றும் துண்டுகள் 6, 5, 4 மற்றும் 3 ; மேற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. சி. கொத்தலாவலையால் தயாரிக்கப்பட்ட 1981.01.23 ஆந் திகதிய வரைபடம் இல. 1/81 இல் துண்டு 6 மற்றும் துண்டு 1. இருபத்தெட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 28பே.) விஸ்தீரணம் கொண்ட இது கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 958/23 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

திருமதி கே. ஹற்ச்,
உதவிப் பொது முகாமையாளர் -சட்டம்

11-771/1

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2013.11.01 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

1. "பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சி. மத்தியு அத்தாட்சிப்படுத்திய 2007.04.05 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 4838 இன் பேரில் இல. 190/2, கண்டி ரோட், பஹல பியன்வில, மஹர, கடவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி நாஉல்லகே பிரியந்தி லங்கா பெரேரா என்பவரிடமிருந்து முதலும் 2013.09.13 வரை வட்டியும் ஒரு கோடியே இருபது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு ரூபா ஏழு சதம் (ரூ. 1,20,57,222.07) அத்துடன் ஒரு கோடியே பன்னிரண்டு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்த தொளாயிரத்து இருபத்திரண்டு ரூபா முப்பது சதம் (ரூ. 1,12,63,922.30) ஆண்டுக்கு 12% வீதத்தில் 2013.09.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சி. மத்தியு அத்தாட்சிப்படுத்திய 2007.04.05 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இல. 4838 மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஒரு கோடியே இருபது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு ரூபா ஏழு சதம் (ரூ. 1,20,57,222.07) அத்துடன் 2013.09.14 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் கட்டணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு, இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரி என்ட் எச் ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை (அறவிடல் தொகுதி) தொடர்பாடல் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரி பற்றுவில் பியகம பிரதேச சபை எல்லைகளுள் (கடவத்தை உப

அலுவலகம்) பஹலபியன்வில்லயில் அமைந்த கண்டி வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 170/34 ஐக் கொண்ட "மகுளுகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. ஹியுபோட் பெரேரா தயாரித்த 1999, பெப்புருவரி 8 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.6450 இல் விபரித்த துண்டு 1 எனஅடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடகிழக்கில் : வரைபடம் இல. 6451 இல் துண்டுகள் 1 மற்றும் 3 உம் ; தென்கிழக்கில் : வரைபடம் இல. 6451 இல் துண்டுகள் 3 மற்றும் 2 உம் ; தென்மேற்கில் : ஜீ. டி. மெண்டிஸ் அப்புஹாமி உாமைகோரும் காணியும் ; வடமேற்கில் : வரைபடம் இல. 6443 இல் துண்டு 2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6450 இன்படி பன்னிரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 504/283 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு பஹலபியன்வில்லயில் அமைந்த கண்டி வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 170/34 ஐக் கொண்ட "மகுளுகஹவத்த" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6450 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடகிழக்கில் : வரைபடம் இல. 6451 இல் துண்டுகள் 2 மற்றும் 3 உம் ; தென்கிழக்கில் : ஜீ. டி. மெண்டிஸ் அப்புஹாமி உரிமைகோரும் காணியும் ; தென்மேற்கில் : வரைபடம் இல. 6451 இல் துண்டு 1 மற்றும் துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6450 இன்படி பன்னிரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 504/284 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு பஹலபியன்வில்லயில் அமைந்த "மகுளுகஹவத்த" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. ஹியுபோட் பெரேரா தயாரித்த 1999, பெப்புருவரி 8 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 6451 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடகிழக்கில் : வரைபடம் இல. 6452 துண்டு 27 உம் ; தென்கிழக்கில் : வரைபடம் இல. 6451 இல் துண்டு 2 உம், வரைபடம் இல. 6450 இல் துண்டு 2 உம் ; தென் மேற்கில்: வரைபடம் இல. 6451 இல் துண்டு 2 உம் வரைபடம் இல. 6450 இல். துண்டு 1 உம் ; வடமேற்கில் : வரைபடம் இல. 6450 இல் துண்டு 1 மற்றும் துண்டு 1 என எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6451 இன்படி மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 3பே.) விஸ்தீரணமுடையது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 504/51 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர். கே. ஜீ. ஹியுபேர்ட் பெரேரா தயாரித்த 1999, பெப்புருவரி 8 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 6452 இல் விபரித்த துண்டுகள் 27 மற்றும் 28 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கங்கள் நெடுகவும் அதன் மீதான வழி உரிமையும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். டி. கமகே,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பேலியகொடை மேற்றரக் கிளை,
2013, மே 02.

11-769

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது.)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்.

கணக்கு இல.: 0120-32415986-001 (நுகேகொடை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2013.07.15 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென அறிவிக்கப்படுகின்றது:-

"வாத்துவையைச் சேர்ந்த கப்புசிக்குகே நிலுனிகா உபேகா விரணி பர்னாந்து மற்றும் களுஹென்னதிகே அனுர இந்திரக பர்னாந்து "கடனெடுத்தவர்" என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது - கம். பதிவு இல. PQ 9) சார்பில் பிரசித்த நொத்தாரிசு பி. கருணாசேகர என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2010, யூலை 01 ஆந் திகதிய 1481 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2012, ஒற்றோபர் 19 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது எழுபத்தெட்டு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து நூற்று ஒரு ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 78,43,101.43) செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு உரியதாக செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 78,43,101.43 பணத்தொகையை யும் 2012, ஒற்றோபர் 20 ஆந் திகதிமுதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தொரு சதவீதப்படி (31%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 1481 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு ஈடு வைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் மற்றும் பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவில் பாணந்துறை - நகர சபை எல்லைகளினுள், பட்டிய வடக்கில் அமைந்துள்ள 'ஹீன் இரவல்ல அல்லது இரவல்ல மற்றும் தங்கஹகும்புர மற்றும் அரப்பொடகுருந்துவத்தையின் துண்டு 1A' என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. டபிள்யு. எஸ். சி. வித்தானையால் தயாரிக்கப்பட்ட 2009.09.11 ஆந் திகதிய 3206 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு A' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள

கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இல. 2005/504 இல் துண்டு D1; கிழக்கு : வரைபடம் இல. 2005/504 இல் துண்டு D1 மற்றும் R1 ; தெற்கு : வரைபடம்இல. 2005/ 504 இல் துண்டு 5 ; மேற்கு : கட்டுமான வடிகால் சொல்லப்பட்ட 3206 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ.16.10பே.) விஸ்தீரணம் கொண்ட இது, பாணந்துறை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் F584/ 216 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரைபடம் இல. 3206 இல் துண்டு A எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட சொல்லப்பட்ட காணிப்பங்கீடு கீழே விவரிக்கப்பட்ட காணிகளின் மீள் அளவீடும் ஒன்றிணைப்புமாகும்:-

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் மற்றும் பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவில் பாணந்துறை - நகர சபை எல்லைகளினுள், பட்டிய வடக்கில் அமைந்துள்ள 'ஹீன் இரவல்ல அல்லது இரவல்லவின் துண்டு C மற்றும் தங்கஹகும்புர மற்றும் அரப்பொட குருந்துவத்தையின் துண்டு 1A' என்றழைக்கப்படும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளா என். ஹேரத்தால் தயாரிக்கப்பட்ட 2005.10.27 ஆந் திகதிய வரைபடம் இல. 2005/ 455 இல் காட்டப்பட்ட துண்டு A இன் மீள் அளவீடும் உட்பிரிவுமாயுள்ள) காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் என். ஹேரத்தால் தயாரிக்கப்பட்ட 2005.12.06 ஆந் திகதிய 2005/504 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு 6' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு 7 ; கிழக்கு R1; தெற்கு : துண்டு 5 ; மேற்கு : கட்டுமான வடிகால். சொல்லப்பட்ட 2005/504 ஆம் இலக்க வரைபடத்தின்படி எட்டு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.10பே.) விஸ்தீரணம் கொண்ட இது, பாணந்துறை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் F584/ 127 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் மற்றும் பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவில் பாணந்துறை - நகர சபை எல்லைகளினுள், பட்டிய வடக்கில் அமைந்துள்ள 'தங்கஹகும்புர ஹீன் இரவல்ல அல்லது இரவல்ல துண்டு C என அழைக்கப்படும் காணியின் 27010.2005 ஆந் தேதிய வரைபடம் இல. 2005/ 455 இல் காட்டப்பட்ட துண்டு A இன் மீள் அளவீடும் உட்பிரிவுமாயுள்ள) காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். ஹேரத்தால் தயாரிக்கப்பட்ட 2005.12.06 ஆந் திகதிய 2005/504 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு D2' (வடிகாலுக்கான ஒதுக்கம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு 5 ; கிழக்கு: துண்டு R1; தெற்கு : அதே காணியின் துண்டு 2 ; மேற்கு : கட்டுமான வடிகால். சொல்லப்பட்ட 2005/504 ஆம் இலக்க வரைபடத்தின்படி பூச்சியம் தசம் இரண்டு எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 0.28பே.) விஸ்தீரணம் கொண்ட இது, பாணந்துறை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் F571/ 22 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் மற்றும் பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவில் பாணந்துறை - நகர சபை எல்லைகளினுள், பட்டிய வடக்கில் அமைந்துள்ள 'ஹீன் இரவல்ல அல்லது இரவல்லவின் துண்டு C மற்றும் தங்கஹகும்புர மற்றும் அரப்பொட குருந்துவத்தையின் துண்டு 1A' என்றழைக்கப்படும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். ஹேரத்தால் தயாரிக்கப்பட்ட 2005.10.27 ஆந் திகதிய 2005/455 இல் காட்டப்பட்ட துண்டு A இன் மீள்அளவீடும் உட்பிரிவுமாயுள்ள) காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். ஹேரத்தால் தயாரிக்கப்பட்ட 2005.12.06 ஆந் திகதிய 2005/504 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு R1' (15 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிக்கப்படடுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டுகள் 7, D1 மற்றும் 1 ; கிழக்கு: வரைபடம் இல. 9407 இல் துண்டுகள் 2, 3, 4 துண்டு D மற்றும் வீதி (ந. ச.) ; தெற்கு : வீதி (ந. ச.) மற்றும் அதே காணியின் துண்டு 2 ; மேற்கு : துண்டுகள் D2, 5, 6 மற்றும் 7. சொல்லப்பட்ட 2005/ 504 ஆம் இலக்க வரைபடத்தின்படி பன்னிரண்டு தசம் எட்டு மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12.83பே.) விஸ்தீரணம் கொண்ட இது, பாணந்துறை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் F571/21 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

திருமதி கே. ஹற்ச்,
உதவிப் பொது முகாமையாளர் -சட்டம்

11-771/2

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2013, மே 31 ஆந் திகதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"தொலங்கமுவ, கண்டி வீதி, D6/5A என்னும் இலக்கத்தில் அமைந்துள்ளதும், 'சந்தேகமஅவுண' என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தொழில் கொண்டு நடாத்துகின்ற திசாநாயக்ககே சிந்தக்க ஜயவிலால் பிரேமதிலக்க என்பவர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சிசில் பீ. ராஜரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, திசெம்பர் 22 ஆந் திகதிய 1564 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது, வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

2013, மாச்சு 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக அறுபத்தேழு இலட்சத்து எண்பத்தையாயிரத்து நாற்பத்து நான்கு ரூபா ஐந்து சதம் (ரூ. 67,85,044.05) கொண்ட தொகையும், 2013, ஏப்பிறல் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஐந்து இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூற்று அறுபத்துநான்குரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 5,57,364.64) கொண்ட தொகை மீது

ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதத்திலான (32%) வட்டியும், ஐம்பத்தெட்டு இலட்சம் ரூபா (ரூ. 58,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு சதவீதத்திலான (8%) வட்டியும், சொல்லப்பட்ட வீதம் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படுதல் வேண்டும், சொல்லப்பட்ட திசாநாயக்ககே சிந்தக்க ஜயவிலால் பிரேமதிலக்க என்பவரிடமிருந்து மேற்கூறப்பட்ட 1564 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது முன்னர் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் என அறியப்பட்ட இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதி களின்படி மேற்சொல்லப்பட்ட 1564 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனை களுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் கட்டிடங்களையும் அதன்மீதுள்ள வேறெல்லா வற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறுபத்தேழு இலட்சத்து எண்பத்தையாயிரத்து நாற்பத்து நான்கு ரூபா ஐந்து சதம் (ரூ. 67,85,044.05) கொண்ட தொகையையும், 2013, ஏப்பிறல் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஐந்து இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூற்று அறுபத்துநான்கு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 5,57,364.64) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு வீத (32%) வட்டியையும், அத்துடன் ஐம்பத்தெட்டு இலட்சம் ரூபா (ரூ. 58,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு சதவீதத்திலான (8%) வட்டியும், சொல்லப்பட்ட வீதம் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படுதல் வேண்டும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 1564 ஆம் இலக்க ஈட்டு முறியினால் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு திசாநாயக்ககே சிந்தக்க ஜயவிலால் பிரேமதிலக என்பவரினால் ஈடுவைக்கப்பட்ட காணியும் கட்டிடங்களும் அதன்மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**1564 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல் கோறளையின் கீரவெலிப் பத்துவவில் தொலங்கமுவவில் அமைந்துள்ளதும், ''கல்பிட்டிய வத்த'' எனவழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரீ. என். கல்தெரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.12.16 ஆந் திகதிய 3237/ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; பரப்பளவில் இது, ஒரு றூட் மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகளை (0ஏ. 1றூ. 5.3பே.). தற்போது ஒரு றூட் மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகளை (0ஏ. 1றூ. 3.5பே.) கொண்டுள்ளதுடன், அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது - வடக்கில் : ஜீ. அப்புஹாமிக்குச் சொந்தமான பளுவத்த; கிழக்கில் : டபிள்யூ. டபிள்யூ. ஜீ. எம். மொஹொட்டி அப்புஹாமிக்குச் சொந்தமான கல்பிட்டிய கலகாவ வத்த ; தெற்கில் : கொழும்பு - கண்டி வீதி மற்றும் ; மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

11-727

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 மற்றும் 19 ஆம் இலக்கங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0031 5001 0631 -டீ. எஸ். எம். பண்டா

2013, செத்தெம்பர் 26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் : -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான சீ. ஜீ. பண்டார என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மார்ச்சு 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 903 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென்னகோன் முதியன்சேலாகே சுமதிராணே பண்டா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 903 எனும் ஈட்டு முறியின் பிரகாரம், அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் முப்பத்தேழு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நூற்று நாற்பத்தொரு ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 37,38,141.23) 2013, ஓகத்து 27 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட முப்பத்தேழு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நூற்று நாற்பத்தொரு ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 37,38,141.23) 2013, ஓகத்து 28 ஆந் திகதி முதல் இல. 903 எனும் ஈட்டு முறியின்

மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முப்பத்து நான்கு இலட்சத்த இருபத்தையாயிரத்து அறுநூற்று எண்பத்தொரு ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூ. 34,25,681.95) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 903 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்துவை சல்பிட்டி கோரளேயின் மொரட்டுவை நகர சபை எல்லைகளுக்குள் மொரட்டுவெள்ளையில் அமைந்த ஃபிரேசர் அவெனியூ, வரிமதிப்பீட்டு இல. 27 ஐ ஏற்ற "பயுருகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஓ. ஜே. பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, யூலை 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 3597 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 1A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லகைளாவன - வடக்கிற்கு : பிரேசா அவெனியூ; கிழக்கிற்கு : வரிமதிப்பீட்டு இல. 25 ஐ ஏற்ற வளவு ; தெற்கிற்கு : அதே காணியின் லொட் 1B மற்றும் ; மேற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. சீ.ஆர். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1969, மார்ச் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 22 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 3 அடையும் வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஆறு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.65பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 3597 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் M 3126/01 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சீ. ஆர். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1969, மார்ச் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 22 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 3 மற்றும் நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாண்/பக்கம் M 915/52 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-816/1

---

## திருத்தம்

### இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

திருத்தம் சம்பந்தமான அறிவித்தல்

கடன் இலக்கம் : P020000001
கடனாளியின் முழுப்பெயர் : ராஜகுரு முதியன்சேலாகே ஜயதிலக்க

2012.08.10 ஆந்திகதி 1771 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் தீர்மானம் நிறைவேற்றல் சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில், 02, 03, 04, 07, 10 மற்றும் 11 ஆம் இலக்க காணித்துண்டுகள் சம்பந்தமான அட்டவணையில் காணப்படும் 07 ஆம் இலக்க காணித்துண்டுக்கான அட்டவணை, தீர்மானம் நிறைவேற்றல் சம்பந்தமான பிரசுரித்தலுக்கு சம்பந்தப்படவில்லை என்பதினால் இது நீக்கம் செய்யப்பட்டு திருத்தம் செய்யப்படுகிறது என்பதனை இத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது முகாமையாளர்.

இலங்கைத வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுதாபன வங்கி,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
2013.11.08.

11-840